No. of Printed Pages : 8

பதிவு எண் | M | A | R | 2 | 0 | 1 | 8 |

# தமிழ் இரண்டாம் தாள்

# Language – Part I – TAMIL – Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (i) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(ii) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் 38-க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக்கப் பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.** 5x1=5

1. பல் + தீது என்பது ________ எனப் புணரும்.
   (அ) பஃறீது (ஆ) பலதீது (இ) பல்தீது

2. அந்தமான் என்பது ________ க்கு எடுத்துக்காட்டு.
   (அ) தொடர்மொழி (ஆ) பொதுமொழி (இ) தனிமொழி

[ திருப்புக

3. கருமை + குழி என்பது ________ எனும் விதிகளின்படி புணரும்.
(அ) தன்னொற்றிரட்டல், இடையுகரம் 'இ' ஆதல்
(ஆ) ஈறுபோதல், இனமிகல்
(இ) ஆதி நீடல், இனமிகல்

4. குறிஞ்சி நிலத்திற்குரிய பறவைகள் ________ .
(அ) நாரை, அன்னம் (ஆ) புறா, பருந்து (இ) கிளி, மயில்

5. புறத்திணைகள் ________ வகைப்படும்.
(அ) ஏழு (ஆ) பன்னிரெண்டு (இ) ஐந்து

## பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக. **5x1=5**

6. பாவை படபடவெனப் பேசினாள். இதில் ''படபட'' என்பது ________ .

7. 'தேன் நிகர் தமிழ்' – இச்சொற்றொடரில் அமைந்துள்ள உவம உருபு ________ .

8. ஒரு பொருள் குறித்து வரும் சொற்களையே ________ என்பர்.

9. வெண்பாவின் ஓசை ________ ஆகும்.

10. ஒரு சொல் இரு பொருள்பட அமைந்து வருதல் ________ எனப்படும்.

## பகுதி - 3

சுருக்கமாக விடையளிக்கவும். **10x1=10**

11. வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றினைச் சான்று தந்து விளக்குக.

12. 'அன்பரசன் திருக்குறளைக் கற்றான்' – பிறவினையாக மாற்றுக.

13. இளமைப் பெயர்களை எழுதுக.
சிங்கம் ________ ; மான் ________ .

14. தொகைச் சொல்லை விரித்தெழுதுக.
முத்தமிழ்

15. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை, பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.
ஒளி ஒலிப்படக் கருவி, திரையரங்குகளில் திரைப்படம் காட்டப் பயன்படுகின்றன.

16. கீழ்க்காணும் தொடரினை சந்திப் பிழையின்றி எழுதுக.
மேடைபேச்சு மிகுந்த பயனை தரவல்லது.

17. இரு பொருள் தருக.
மெய்.

18. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
நான் இந்தக் காலேஜின் ஓல்டு ஸ்டூடண்ட்.

19. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியிட்டு எழுதுக.
ஆம் போக வேண்டும் என்றார்

20. மரபுத் தொடருக்கு ஏற்ற பொருளைத் தருக.
ஆயிரங் காலத்துப் பயிர்

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 10)

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தனுக்கு** விடையளிக்கவும். 5x2=10

21. ஐகாரக் குறுக்கம் எவ்வெவ்விடங்களில் வரும் ?

22. சொல் என்றால் என்ன ?

23. வஞ்சி, வாகை திணையை விளக்குக.

[ திருப்புக

24. மையீற்றுப் பண்புப் பெயர்கள் நான்கினை எழுதுக.

25. அகத்திணை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

26. ஐப்பசி, கார்த்திகை ஆகிய இருதிங்களும் எக்காலத்திற்குரியன ?

27. உவம உருபுகள் நான்கினைக் கூறுக.

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : **50**)

**குறிப்பு :** பகுதி **3** -ல் வினா எண் **35** -இல் **காது கேளாத மாணவர்களுக்கு மட்டும்** மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் இரண்டினுக்கு** விடையளிக்கவும். **2x5=10**

28. வெண்பாவின் பொது இலக்கணம் யாது ?

29. 'தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்'
– இதில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

**அல்லது**

தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

## பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் இரண்டிற்கு** ஒவ்வொன்றிற்கும் **அரைப்பக்க** அளவில் விடையளிக்கவும். 2x5=10

**31.** 'மெல்ல மெல்ல மற' என்னும் சிறு கதையின் மையக்கருத்தை மாற்றாமல் சுருக்கி எழுதுக.

**32.** இலிண்ட்கிரென் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

**33.** சட்ட வகைகள் குறித்து கட்டுரை வரைக.

## பகுதி - 3

**34.** (அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

இளவரசன், 'மம்மி நான் பேங்கிற்குப்போய் வருகிறேன்' என்று கூறித் தனது சைக்கிளில் சென்றான். வழியில் ட்ராபிக் ஜாம் ஆனதால் பேங்க்கில் கியூ அதிகமாக இருந்தது.

(ஆ) அரபு எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.

75, 86, 138, 294

**35.** கீழ்க்காணும் ஆங்கில உரைப்பகுதியைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

(அ) Food is essential for all living beings. Without food man cannot live long. Everyman has to eat a certain quantity of food. If he eats less than that quantity his health will spoil and he will fall ill. So, everyman has to eat enough food to live.

(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டிற்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

(i) Hearty laugh dispels disease.

(ii) Take time by the forelock.

(iii) The mills of God grind slow but sure.

(iv) Prevention is better than cure.

[ திருப்புக

35. குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. 5x1=5

பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். இவர் 1891 -ஆம் ஆண்டு ஏப்ரல் 29 -ஆம் நாள் புதுவையில் பிறந்தார். தந்தை கனகசபை. தாய் இலக்குமி. பாரதியின் மேல் கொண்ட பற்றால் தம் பெயரை பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். இவர் பாவேந்தர், புரட்சிக்கவிஞர் ஆகிய சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறார். குடும்ப விளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு முதலியன இவர்தம் படைப்புகளாகும். பாரதிதாசன் பரம்பரை என்றொரு கவிஞர் பரம்பரையே அவர் காலத்தில் உருவானது. தமிழக அரசு, பாவேந்தர் படைப்புகளை நாட்டுடைமையாக்கியு-ள்ளது. ஆண்டுதோறும் சிறந்த கவிஞர்களுக்குப் பாவேந்தர் விருது வழங்கி வருகிறது. திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பெயரில் பல்கலைக்கழகம் அமைத்து சிறப்பு சேர்த்துள்ளது.

(i) பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் என்ன ?

(ii) பாவேந்தர் பாரதிதாசன் எங்கே, எப்போது பிறந்தார் ?

(iii) பாவேந்தர் பாரதிதாசனின் பெற்றோர் யாவர் ?

(iv) பாவேந்தர் பாரதிதாசனின் படைப்புகள் நான்கினை எழுதுக.

(v) பாரதிதாசன் பல்கலைக்கழகம் எங்குள்ளது ?

## பகுதி - 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றினுக்கு** விடையளிக்கவும். 1x5=5

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

கீழ்வானம் சிவக்கத் தொடங்கியிருந்தது. பறவைகள் ஒலியெழுப்பியவாறே தங்கள் கூடுகளைவிட்டுப் பறக்கத் தொடங்கின. அந்தக் காலை வேளையில் வானில் திடீரென்று ஓர் ஒளி தோன்றியது. அப்போது ...............

**அல்லது**

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.

'மழை' **அல்லது** 'நட்பு'

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலில் அமைந்துள்ளன ஏற்புடைய நயங்களில் **ஏதேனும் ஐந்தினை** எடுத்து எழுதுக. **1x5=5**

மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லை வேண்டும் நாட்டில் யாண்டும்

*- பாரதிதாசன்*

## பகுதி - 6

38. இராணி (35 வயது) தன் கணவன் கோபியுடன் (40 வயது) 25.03.2018 அன்று சென்னையிலிருந்து கோவைக்கு தொடர் வண்டியில் செல்லத் திட்டமிட்டு இருக்கை முன்பதிவு செய்ய முன்பதிவு மையத்திற்கு செல்கிறார். உங்களை இராணியாக பாவித்து விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினைத் தேர்ந்தெடுத்து பூர்த்தி செய்க. **1x5=5**

## பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்கவும். **3+2=5**

கபிலன் பத்தாம் வகுப்பு படிக்கிறான். சில நாட்களாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளிநேரம் முடிந்தும் அவன் வீட்டிற்கு தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால், உண்மையை சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டு தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

(i) பெற்றோர் கபிலனைப் பற்றி நினைப்பது சரியா ?

(ii) நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்புக் கொள்ள வேண்டும் ?

(iii) இச்சூழலில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் திறன் என்ன ?

[ திருப்புக

(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்கவும்.

தேவி பதினோராம் வகுப்பில் சேர்ந்து சில நாட்கள் ஆகின்றன. அவள் அன்று பள்ளிக்குப் போகாமல் அழுது கொண்டிருந்தாள். கண்கள் இரண்டும் சிவந்து விட்டன. ஆனால், அவள் பெற்றோர் அவளின் அழுகையைப் பொருட்படுத்தவில்லை.

''நான் சொன்னால் சொன்னது தான், நீ படித்தது போதும். இன்னும் மூன்று மாதத்தில் உனக்குத் திருமணம் செய்ய வேண்டியது தான்'' என்று கூறியவாறே அவளுடைய தந்தை வெளியே சென்று விட்டார்.

''அப்பா உனக்கு நல்லதுதான் செய்வார். அப்பாவின் பேச்சைக் கேள்'' என்று அம்மாவும் கூறவே, என்ன செய்வதென்று தெரியாமல் வருத்தத்துடன் இருந்தாள் தேவி.

(i) இந்நிலையில் தேவி எத்தகைய முடிவெடுப்பாள் ?

(ii) உங்களுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால், நீங்கள் எப்படித் தீர்வு காண்பீர்கள் ?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

**40.** கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றினுக்கு** விடையளிக்கவும். **1x10=10**

(அ) நீவிர் வசிக்கும் பகுதியில் தொற்றுநோய் பரவாமல் இருக்க, உரிய நடவடிக்கை எடுக்கும்படி நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் வரைக.

**அல்லது**

(ஆ) வெள்ளத்தில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றியமைக்காக அண்ணா விருது பெற்ற உன் தோழியைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

### பகுதி - 2

**41.** கீழுள்ள வினாக்களுள் **எவையேனும் ஒன்றினுக்கு** குறிப்புகளைக் கொண்டு **ஒரு பக்க** அளவில் கட்டுரை எழுதி தலைப்பு ஒன்று தருக. **1x10=10**

(அ) நீரின்றி இயங்காது உலகம் – நீர்நிலைகள் – நீர்ப் பற்றாக்குறை ஏற்படக் காரணம் – நீரைச் சேமிக்கும் வழிகள் – மழைநீரைச் சேமித்தல் – நிலத்தடி நீரைச் சேமிக்கும் வழிமுறைகள் – மரம் வளர்ப்போம் – மழை பெறுவோம்.

**அல்லது**

(ஆ) கணினியின் தோற்றம் – வகைகள் – பயன்பாடு – நன்மை தீமைகள் – உலகம் உள்ளங்கையில்.

-o0o-

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6**
**பத்தாம் வகுப்பு – பொதுத் தேர்வு – மார்ச் 2018**
**தமிழ் இரண்டாம் தாள் – விடைக்குறிப்புகள்**

**மொத்த மதிப்பெண்கள் 100**

**விடைத்தாள் மதிப்பிடும் போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.**

1. நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து, கருத்துப்பிழை, தொடர் பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை இல்லாதிருப்பின் முழு மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.
3. எழுத்துப்பிழை, ஒற்றுப் பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து, அவ்வாறு **குறைக்கும் மதிப்பெண் எக்காரணம் கொண்டும், வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்குக்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.**
4. கவிதை எழுதும் பகுதியில் சந்தம், தூய தமிழ்ச்சொற்கள் இருந்தால் மட்டும் முழு மதிப்பெண் வழங்கலாம்.
5. கட்டுரையில் மொழிநடை இன்றியமையாதது.
6. விடைகள் பிறமொழிக் கலப்பின்றி (சிறுகதை நீங்கலாக) எழுதப்பட்டிருக்கவேண்டும்.
7. தவறான விடைகளைக் (X) குறியிட்டும், தொடர்பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப்பிழைகளை (^) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.
8. **மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே (✓) குறியிடுதல் வேண்டும்.**
9. **மிகை விடையிருப்பின் 'மிகை' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.**
10. **ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் 'மீண்டும்' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.**

மதிப்பெண்கள்: 20

## பிரிவு –I

| பகுதி – 1 | | | |
|---|---|---|---|
| உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் சேர்த்து எழுதுக | | | 5 X 1 = 5 |
| 1. | அ) பஃறீது | 1 | |
| 2. | ஆ) பொது மொழி | 1 | |
| 3. | ஆ) ஈறுபோதல், இனமிகல் | 1 | |
| 4. | இ) கிளி, மயில் | 1 | |
| 5. | ஆ) பன்னிரண்டு | 1 | |

| பகுதி – 2 | | | |
|---|---|---|---|
| கோடிட்ட இடத்தை நிரப்புக | | | 5 X 1 = 5 |
| 6 | இரட்டைக்கிளவி | 1 | |
| 7. | நிகர் / நிகர | 1 | |
| 8. | ஒரு பொருட் பன்மொழி | 1 | |
| 9. | செப்பலோசை | 1 | |
| 10. | இரட்டுறமொழிதல்/ சிலேடை | 1 | |

| பகுதி – 3 | | | |
|---|---|---|---|
| சுருக்கமாக விடையளி | | | 10 X 1 = 10 |
| 11. | வல்லினம் மிகும் இடம் – சரியாக இருப்பின் மதிப்பெண் வழங்குக. (ஒன்று மட்டும்) | 1 | |
| 12. | அன்பரசன் திருக்குறளைக் **<u>கற்பித்தான்.</u>** | 1 | |
| 13. | குருளை,<br>கன்று | ½<br>½ | |
| 14. | இயல், இசை, நாடகம் | 1 | |
| 15. | ஒளி ஒலிப்படக் கருவி, திரையரங்குகளில் திரைப்படம் காட்டப் பயன்படுகின்றது. | 1 | |
| 16. | மேடைப் பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது. | 1 | |
| 17. | உடல் / உடம்பு<br>உண்மை | ½<br>½ | |
| 18. | நான் இந்தக் கல்லூரியின் **முன்னாள்/ மேனாள்/ பழைய** மாணவன். | 1 | |
| 19. | "ஆம், போகவேண்டும்" என்றார். | 1 | |
| 20. | நீண்ட காலத்திற்குரியது. | 1 | |

பிரிவு –II மதிப்பெண்கள்:10

| எவையேனும் ஐந்தனுக்கு மட்டும். | | | 5 X 2 = 10 |
|---|---|---|---|
| 21. | சொல்லுக்கு முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களில் வரும். | 2 | 2 |
| 22. | ஓர் எழுத்து, தனியாகவோ பல எழுத்துகள் தொடர்ந்தோ பொருள் தருவது சொல் எனப்படும். | 2 | 2 |
| 23. | மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணை.<br>வெற்றி பெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது வாகைத்திணை | 1<br>1 | 2 |
| 24. | செம்மை, சிறுமை, சேய்மை, நன்மை, (அல்லது பொருத்தமான நான்கு விடை இருப்பின் மதிப்பெண் வழங்குக) | 2 | 2 |
| 25. | 1. ஏழு<br>2. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை. | 1<br>1 | 2 |
| 26. | குளிர்காலம் | 2 | 2 |
| 27. | போல, புரைய, ஒப்ப, உறழ (அல்லது பொருத்தமான நான்கு விடை இருப்பின் மதிப்பெண் வழங்குக) | 2 | 2 |

பிரிவு –III மதிப்பெண்கள்:50

| பகுதி –1 | | | |
|---|---|---|---|
| எவையேனும் இரண்டனுக்கு மட்டும். | | | 2X5 = 10 |
| 28. | 1. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்.<br>2. இயற்சீர், வெண்சீர் வரும். பிற சீர்கள் வாரா.<br>3.இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும். பிற தளைகள் வாரா.<br>4. ஈற்றடியின் ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்று கொண்டு முடியும்.<br>5. செப்பலோசை பெற்று வரும்.<br>6. இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை வரும். | | 5 |

| | | | |
|---|---|---|---|
| 29. | இக்குறட்பாவில் <u>**சொற்பொருள் பின்வரு நிலையணி**</u> பயின்று வந்துள்ளது. | 1 | 5 |
| | <u>**அணி இலக்கணம்**</u><br>செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது. | 2 | |
| | <u>**விளக்கம்**</u><br>இப்பாடலில் 'தீய' என்னும் சொல் 'தீமை' என்னும் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளது. | 2 | |
| | (அல்லது)<br><u>**தற்குறிப்பேற்ற அணி**</u> | | |
| | <u>**அணி இலக்கணம்**</u><br>இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி. | 2 | |
| | <u>**சான்று**</u><br>ஏற்புடைய சான்று இருப்பின் மதிப்பெண் வழங்குக. | 1 | |
| | <u>**விளக்கம்**</u><br>ஏற்புடைய விளக்கம் இருப்பின் மதிப்பெண் வழங்குக. | 2 | |

| 30 | <u>**அசை பிரித்தல்**</u> | | | | |
|---|---|---|---|---|---|
| | **சீர்** | **அசை** | **வாய்பாடு** | | 5 |
| | இல்/லா/ரை | நேர், நேர், நேர் | தேமாங்காய் | 2 | |
| | எல்/லா/ரும் | நேர், நேர், நேர் | தேமாங்காய் | | |
| | எள்/ளுவர் | நேர், நிரை | கூவிளம் | | |
| | செல்/வரை | நேர், நிரை | கூவிளம் | 2 | |
| | எல்/லா/ரும் | நேர், நேர், நேர் | தேமாங்காய் | | |
| | செய்/வர் | நேர், நேர் | தேமா | | |
| | சிறப்/பு | நிரைபு | பிறப்பு | 1 | |

| | | |
|---|---|---|
| | பகுதி – 2 | |
| எவையேனும் இரண்டனுக்கு மட்டும். | | 2 X 5 = 10 |
| 31. | வினாவிற்கேற்ற விடை இருப்பின் (பத்தி வாரியாக) மதிப்பெண் | |
| 32. | வழங்கலாம். | |
| 33. | குறிப்பு –உட்தலைப்புகளிட்டு எழுதியிருக்க வேண்டும். | |

| | | | |
|---|---|---|---|
| | பகுதி – 3 | | |
| கீழ்க்காணும் பத்தியிலுள்ள ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழாக்கம் செய்க | | | 3 + 2 = 5 |
| 34. (அ) | இளவரசன், **<u>அம்மா</u>** நான் **<u>வங்கிக்குப்</u>** போய் வருகிறேன் என்று கூறித் தனது **<u>மிதிவண்டியில்</u>** சென்றான். வழியில் **<u>போக்குவரத்து நெரிசல்</u>** ஆனதால் **<u>வங்கியில் வரிசை</u>** அதிகமாக இருந்தது. | 6 x ½ = 3 | 3 |
| (ஆ) | உரிய தமிழ் எண்களை எழுதுக<br>75 – எரு 86– அகூ 138– கஙஅ 294– உகூச | 4 x ½ = 2 | 2 |

| | | |
|---|---|---|
| கீழ்க்காணும் பத்தியிலுள்ள ஆங்கில உரைப்பகுதிக்குத் தமிழாக்கம் செய்க | | 3 + 2 = 5 |
| 35. (அ) | உயிருள்ளவை அனைத்திற்கும் உணவு இன்றியமையாததாகும். உணவின்றி மனிதன் நீண்டநாள் உயிர் வாழ முடியாது. ஒவ்வொரு மனிதனும் உயிர்வாழப் போதுமான உணவினை உண்ண வேண்டும். அவன் அந்த அளவை விடக் குறைவான உணவினை உண்டால் உடல்நலம் குன்றி நோயில் வீழ்வான். ஆகையால் ஒவ்வொரு மனிதனும் உயிர்வாழப் போதுமான உணவினை உண்ண வேண்டும்.<br>(தகுந்த மொழிபெயர்ப்பு எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக) | 3 |

| | | | |
|---|---|---|---|
| 35 (ஆ) | கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப்பழமொழியை எழுதுக.<br>(i) வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்.<br>(ii) காலத்தே கடமையைச் செய்.<br>(iii) அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்.<br>(iv) வெள்ளம் வருமுன் அணை போட வேண்டும் / வருமுன் காப்பதே சிறப்பு | | 2 |
| 35 | காதுகேளாத மாணவர்களுக்கான மாற்றுவினா<br>1. சுப்புரத்தினம்<br>2. 1891ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் நாள் புதுவையில் பிறந்தார்<br>3. கனகசபை– இலக்குமி<br>4. குடும்ப விளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு (இவற்றில் ஏதேனும் நான்கு)<br>5. திருச்சிராப்பள்ளி. | 1<br>1<br>1<br>1<br>1 | 5 |

| பகுதி –4 | | | |
|---|---|---|---|
| கீழ்க்காணும்ஒன்றனுக்கு விடையளி | | | |
| 36 (அ) | 1. பொருத்தமான சூழலில் கதையை நிறைவு செய்தல்<br>2. தலைப்பு | 4<br>1 | 1X5 = 5 |
| | (அல்லது) | | |
| (ஆ) | மழை அல்லது நட்பு என்ற தலைப்பில் பொருத்தமான கவிதை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக. | 5 | 5 |

| பகுதி –5 | | | |
|---|---|---|---|
| 37 | ஏற்புடைய ஐந்து நயங்கள் இருப்பின் மதிப்பெண் வழங்கலாம். | | 1X5 = 5 |

| பகுதி – 6 | | |
|---|---|---|
| 38 | படிவத்தினைப் பூர்த்தி செய்க | 1X5=5 |
| | தொடர்வண்டி முன்பதிவுப் படிவம் | 5 |
| | வண்டியின் பெயர் :**சென்னை – கோவை தொடர்வண்டி** | |
| | பயணதேதி : **25–03–2018** | |
| | வகுப்பு–முதல்/ இரண்டு படுக்கை எண்ணிக்கை–2 | |
| | புறப்படும் இடம் : **சென்னை**–சேருமிடம்–**கோவை** | |
| | ஏறுமிடம்–சென்னை | |

| வ. எண் | பெயர் | பால் ஆ/பெ | வயது | பயணச்சலுகை உரிமை எண் | விருப்பம் |
|---|---|---|---|---|---|
| 1 | **இராணி** | பெ | **35** | – | – |
| 2 | **கோபி** | ஆ | **40** | – | – |

விண்ணப்பதாரரின்பெயர்– **இராணி**
முகவரி–சென்னை
தொலைபேசிஎண்–xxxxxxxxxx

**(இராணி)**
கையொப்பம்

| பகுதி –7 | | | |
|---|---|---|---|
| **கீழ்க்காணும் சூழல் வினாக்களுக்கு விடையளி** | | | **3 +2 = 5** |
| **39 (அ)** | **1. சரி.**<br>**2. நல்ல நண்பர்களுடன்.**<br>**3. மறுத்தல் திறன்.**<br>**(ஏற்புடைய விடைகளிருப்பின் மதிப்பெண் வழங்குக.)** | **1**<br>**1**<br>**1** | **3** |
| **(ஆ)** | **1. திருமணத்தை மறுப்பாள்.**<br>**2. திருமணத்திற்கு இது உரிய வயது அன்று என்று கூறி புரிய வைப்பேன்.**<br>**(ஏற்புடைய விடையிருப்பின் மதிப்பெண் வழங்குக.)** | **1**<br>**1** | **2** |

பிரிவு –IV மதிப்பெண்கள்:20

## பகுதி –1

ஒன்றனுக்கு மட்டும் 1X10 = 10

| | | | |
|---|---|---|---|
| 40(அ) | அனுப்புநர் | 1 | 10 |
| | பெறுநர் | 1 | |
| | விளித்தல் | 1 | |
| | பொருள் | 1 | |
| | செய்தி | 3 | |
| | இப்படிக்கு | 1 | |
| | இடம், நாள் | 1 | |
| | உறைமேல்முகவரி | 1 | |
| | (அல்லது) | | |
| (ஆ) | பாராட்டுக் கடிதம் | | |
| | இடம் நாள் | 1 | |
| | விளித்தல் | 1 | |
| | செய்தி | 6 | |
| | இப்படிக்கு | 1 | |
| | உறைமேல்முகவரி | 1 | |

## பகுதி –2

ஒன்றனுக்கு மட்டும் 1X10 = 10

| | | | |
|---|---|---|---|
| 41 (அ) (ஆ) | தலைப்பு | 1 | 10 |
| | குறிப்புச்சட்டகம் | 1 | |
| | முன்னுரை | 1 | |
| | பொருளுரை | 4 | |
| | மேற்கோள் | 1 | |
| | உள்தலைப்புகள் | 1 | |
| | முடிவுரை | 1 | |

********